**ஜா-எல பிரதேச சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 08 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து ஜா எல பிரதேச சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சபையினால் மீளாய்வாண்டு இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கு இணக்கக்கூற்றின்படி காசேட்டு மீதிக்கும் கணக்குகளில் காட்டப்பட்ட வங்கி மீதிக்கும் இடையிலான ரூபா 346,065 ஆன வித்தியாசமானது வங்கிக் கணக்கிணக்கக்கூற்றில் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 379,650 செலவு செய்து சபை நிதியில் காட்டப்பட்ட குரூஸ்வத்த பலநோக்கு மண்டபம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,849 பெறுமதியான நூலகப் புத்தகங்களும் ரூபா 70,000 பெறுமதியான தற்காலிகக் கொட்டகைகளும் மூலதனச் செலவாகக் காட்டப்பட்ட போதிலும் நிலையான சொத்துக் கணக்கில் மூலதனமாக சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 1,344,876 பெறுமதியான 05 சொத்துக்கள் மூலதனச்செலவாக காட்டப்பட்ட போதிலும் நடைமுறைச் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(உ) பட்டுவத்த உப அலுவலகத்தின் நிலையான சொத்துப் பதிவேட்டின் படி 02 சொத்துக்களிற்காக ரூபா 200,000 கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் டிசெம்பர் 31 ஆம் திகதியில் மூலதனமாக்கப்பட்ட நிலையான சொத்து ரூபா 415,505,835 ஆகக் காட்டப்பட்ட போதிலும் மொத்த ஆக்கப்பொருட் கொள்வனவு கணக்கிலும் நன்கொடை கணக்கிலும் சேர்த்து 02 கணக்குகளின் கூட்டு மொத்தத் தொகை ரூபா 415,832,932 ஆகக் காட்டப்பட்டுள்ளது.

(எ) நிலையான சொத்துக் கணக்கில் ரூபா 15,000 ஊழியர் பிணைவைப்பாகக் கணக்குகளில் நீண்டகாலமாகக் காட்டப்பட்ட போதிலும் அந்த மாதிரி நிலையான வைப்பு சபையில் காணப்படவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

கூட்டுமொத்தத் தொகை ரூபா 115,725,427 இற்கான 03 கொடுக்கல் வாங்களிற்கான எழுத்தாவனங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் முறையாக கணக்காய்வு செய்ய முடியாதுள்ளது.

### 1.3.3 சமப்படுத்தப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்கு விடயங்கள் 08 எண்ணிக்கை உள்ள 31 டிசெம்பர் 2015 இற்கு கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தத் தொகை ரூபா 211,594,176 எனக் காட்டப்பட்ட போதிலும் அதற்கான உப பேரேடுகளின் படி கூட்டுமொத்தத் தொகை ரூபா 117,192,366 ஆகக் காட்டப்பட்டதனால் ரூபா 94,401,810 ஆல் வித்தியாசம் காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய செலுத்தவேண்டிய கணக்குகள்

(அ) சில வருடங்களாக கணக்குகளில் மீதியாகக் கொண்டுவரும் கிடைக்க வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 2,193,449 தண்டப் பணம் ரூபா 27,282 மற்றும் 2009 ஆம் வருடத்திற்கு முன்பு கொண்டுவரப்பட்ட கிடைக்க வேண்டிய முற்பணம் (ஆரம்பக் கட்டணம்) ரூபா 4,418,922 ஐயும் சேகரிப்பதற்கு எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சில வருடங்களின் முன் இருந்து கணக்குகளில் கொண்டு வரப்பட்ட அலுவலக ஊழியர் முற்பணக் கணக்குகளின் கூட்டுமொத்தத் தொகை ரூபா 3,180,223 அறவீடு செய்வதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடனும் முகாமைத் தீர்மானங்களுடனும் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வீதிகளிற்கான படம் வரைந்து பெயரிட்டு பதிவு செய்து வர்த்தமானியில் பிரசுரிப்பதன் மூலம் பிரதேச சபைக்கு சொந்தமாக எடுக்க வேண்டும் ஆனாலும் சபைக்கு சொந்தமான வீதிகள் மேறபடி சட்டத்தின் பிரகாரம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரமும் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் அரச ஊழியர் பிணைச் சட்டத்தின் பிரகாரமும் ஊழிய பிணை கொடுக்க வேண்டிய 18 உத்தியோகத்தர்கள் பிணை செலுத்தப்படவில்லை.

(இ) 2002 செப்ரெம்பர் 30 இல் அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் இலக்கம் 364(3) இன் பிரகாரம் ரூபா 25,000 இற்கு மேல் பெறுமதிசேர் வரி அறவீடு செய்யும் போது கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பிரதியிட்டு இறைவரித்திணைக்கள ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும் ஆனாலும் 2015 ஜனவரியில் இருந்து டிசெம்பர் வரை ரூபா 2,694,385 அறவீடு செய்யப்பட்ட போதிலும் இறைவரித் திணைக்கள ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1980 டிசெம்பர் 31 இன் உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 ஆம் இலக்க சுற்று நிரூபத்தின் பிரகாரம் குறைந்தது 05 வருடங்களிற்கு ஒரு தடவை கடை வாடகை மீள் மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் பிரதேச சபையினால் இறுதி கடை வாடகை விலை மதிப்பீடு 1995 ஆம் ஆண்டில் செய்யப்பட்டிருந்தது.

### 1.3.6 தொங்கல் கணக்கு

2015 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 36,425 ஆன பெறுமதியில் வரவு மீதியாகக் கணக்குகளில் பல வருடங்களிற்கு முன்பிலிருந்து மீதி கொண்டு வரப்பட்ட போதிலும் இணங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 9,946,112 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 10,732,401 ஆக விளைந்திருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் பின்வருமாறு.

| | வருமான விடயம் | பாதீடு (ரூபா) '000 | உண்மை (ரூபா) '000 | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) '000 |
|---|---|---|---|---|
| (i) | வீதவரிகள் மற்றும் பற்றாணைக் கட்டணம் | 93,540 | 48,442 | 35,092 |
| (ii) | வாடகைகள் | 14,302 | 13,921 | 10,195 |
| (iii) | உரிமங்கள் | 4,877 | 4,313 | 153,178 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 99,724 | 153,178 | 1,145 |
| | **மொத்தம்** | **212,443** | **219,854** | **199,610** |

### 2.2.2 ஆதனவரி

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் ஆதனவரி விலைமதிப்பானது 05 வருடத்திற்கு ஒரு தடைவ மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் இறுதியாக 2002 ஆம் ஆண்டில் விலை மதிப்பு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1) இன் பிரகாரம் ரூபா 35,092,424 ஆதனவரி கிடைக்க வேண்டியிருந்த போதிலும் அதனை சேகரிப்பதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஏனைய வருமானம்

-----------------------

(அ) 2015 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு ராகம உப அலுவலகத்திற்கு சொந்தமான ரூபா 6,320,752 கிடைக்க வேண்டிய இறைச்சிக் கடைக் குத்தகை மற்றும் வாராந்த சந்தை வருமானங்களை கிடைக்கச் செய்வதற்கு சபையினால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஆ) கந்தான உப அலுவலகத்திற்கு சொந்தமான வியாபார உரிமம் மற்றும் அனுமதிக் கட்டண மீதி 2015 டிசெம்பர் 31 இல் ரூபா 201,650 ஐ அறவீடு செய்ய எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------

### 3.1 செயலாற்றல்

---------------

(அ) பிரதேச சபையால் மீளாய்வாண்டினையும் உள்ளடக்கி திரண்ட மதிப்பீடு ஒன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடத்திற்கான செயற்பாட்டு அறிக்கையில் சுகாதார பிரிவில் 25 நடவடிக்கைகளும் கைத்தொழில் அபிவிருத்தி பிரிவில் 19 நடவடிக்கைகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

------------------------------------------

மீளாய்வாண்டில் சபையின் சராசரியான மாதாந்த காசு மீதி ரூபா 49,100,153 ஆகக் காட்டப்பட்ட போதிலும் ஒரு பகுதியை முதலீடு செய்வதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சுற்றாடல் பிரச்சனைகள்

-------------------------------

(அ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றுச் சூழல் சட்டத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் 2 வது நிரலில் 4.1 பிரிவின் படி எல்லா அனுமதிப்பத்திரங்களும் புதுப்பிக்கப்படும் போது அனுமதிப்பத்திரம் முடிவதற்கு 03 மாதங்களிற்கு முன்பதாக உள்ளூராட்சி சபை நிறுவனத்திற்க சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படாமல் இருந்தது. மற்றும் 3.4.1 நிபந்தனையின் பிரகாரம் களப் பரிசோதனை அறிக்கை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் அந்த அறிக்கையை கணக்கில் எடுக்காமல் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை கூட்டங் கூடிய போதிலும் கணக்காய்வு பரீட்சிப்பின் போது 04 அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு கால தாமதம் ஆகியிருந்தது.

(ஆ) மேற்படி நிபந்தனையில் 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில் நுட்ப வளர்ச்சிக் குழுக் கூட்டம் மாதத்திற்கு ஒரு தடவை கூடி மேலே காட்டப்பட்ட நடவடிக்கைகளின் வளர்ச்சியை மீளாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான செயற்பாடு ஒன்று செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் அதில் 7.3 பிரிவின் படி மேற்படி வளர்ச்சி அறிக்கை மத்திய சுற்றாடல் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகார சபைக்க அனுப்பி அதன் பிரதி ஆணையாளர் உள்ளூராட்சி அதிகார சபைக்கு கட்டாயமாக அனுப்ப வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

---

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

(அ) சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மக்களின் நன்மை கருதி மீளாய்வாண்டில் சேவை வழங்குவதற்காக ரூபா 4,847,500 ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது மற்றும் ரூபா 3,365,000 ஒதுக்கி வைத்திருந்த 04 சேவைத் தலைப்புகளில் 2015 டிசெம்பர் 31 வரைக்கும் அந்த சேவைகள் வழங்கப்படாமல் இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் 36 தலைப்புக்களில் உள்ள ரூபா 12,240,500 பெறுமதியான ஒதுக்கீடு முழுமையாக சேமிப்பாகக் காணப்பட்டுள்ளது. அதன் காரணமாக இப்பாதீடு உற்பத்தித் திறனற்று பாதீட்டுக் கட்டுப்பாட்டிற்கு பிரயோசனமாக பாவிக்கப்படாதிருந்தது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

---

நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு பூரணமாக செய்யப்பட்டிருக்வில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையினால் கூடிய கவனம் எடுக்க வேண்டும்

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) வருமான நிர்வாகம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஊ) சொத்து முகாமைத்துவம்